**க.பொ.த (சாதாரண தரம்)**

**பின்னூட்டல் செயற்பாட்டுப் பத்திரம்: 05 – ஸீறா வத்தாரீஹ்**

# இஸ்லாம்



**உள்ளடங்கும் தேர்ச்சிகள்:**

**தரம் 10: 10.5.1, 10.5.2, 10.5.3,**

**தரம் 11: 11.5.1, 11.5.2, 11.5.3, 11.5.4 11.5.5 11.5.6 11.5.7**

**சமயங்கள் மற்றும் விழுமியக் கல்விக் கிளை**

**கல்வி அமைச்சு**

# க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை -2024

## மாதிரி வினாக்கள்
## செயலட்டை : 05 அஸ்ஸீரா வத்தாரீக்

### சுருக்கமான விடை தருக.

1. ஜாஹிலிய்யக் கால மக்களிடம் காணப்பட்ட நற்பண்புகள் இரண்டைக் குறிப்பிடுக?

   ……………………………………………………………………

   ……………………………………………………………………

2. அறபுத் தீபகற்பத்தின் எல்லைகளைத் தெளிவாகக் குறிப்பிடுக?

   ……………………………………………………………………

   ……………………………………………………………………

3. ஸீறாவைக் கற்க வேண்டுமென்பதற்கான நியாயங்கள் இரண்டு தருக?

   ……………………………………………………………………

   ……………………………………………………………………

4. கலீபா அபூ பக்ர் (ரழி) அவர்கள் தமது ஆட்சியில் எதிர் நோக்கிய முக்கிய பிரச்சினைகள் இரண்டு தருக?

   ……………………………………………………………………

   ……………………………………………………………………

5. கலீபாக்களான அபூ பக்ர் (ரழி), உஸ்மான் (ரழி) ஆகியோர்கள், குர்ஆனின் பாதுகாப்புக்கு சேவை செய்யத் தூண்டுதலாக இருந்தவர்களைக் குறிப்பிடுக?

   ……………………………………………………………………

6. கலீபா உமர் (ரழி) அவர்களது தெரிவுக்கும் கலீபா உஸ்மான் (ரழி) அவர்களது தெரிவிற்கும் இடையிலான வேறுபாட்டை சுருக்கமாக எடுத்துக் காட்டுக.

   ……………………………………………………………………

   ……………………………………………………………………

7. அறபு வரலாற்றாசிரியர் இப்னு ஷஹ்ரயார் தனது ‘அஜாஇபுல் ஹிந்த்’ எனும் நூலில் இலங்கையைப் பற்றிக் குறிப்பிடும் தகவலைச் சுருக்கமாகத் தருக?

…………………………………………………………………

…………………………………………………………………

8. கலீபா உஸ்மான் (ரழி) அவர்களது சேவைகள் இரண்டு தருக

…………………………………………………………………

…………………………………………………………………

9. ஷைகுல் கபீலா என்பது எதனைக் குறிக்கும்?

…………………………………………………………………

10. அஸபிய்யா என்பது எதனைக் குறிக்கும்?

…………………………………………………………………

11. ஸப்உல் முஅல்லகாத் என்பது எதனைக் குறிக்கும்?

…………………………………………………………………

12. ஸஹாபாக்கள் முதலாவது ஹிஜ்ரத் சென்ற நாடு எது?

…………………………………………………………………

13. நபித்துவத்தின் 10 ஆம் ஆண்டு ஏன் ஆமுல் ஹுஸ்ன் என அழைக்கப்படுகிறது?

…………………………………………………………………

14. தேசத்தின் நலனுக்கு முஸ்லிம்கள் ஆற்றிய பங்களிப்புக்கள் நான்கு தருக?

…………………………………………………………………

…………………………………………………………………

15. கலீபா உமர் (ரழி) அவர்களின் சேவைகள் நான்கு தருக.

…………………………………………………………………

………………………………………………………………

16. உஸ்மான் (ரழி) அவர்கள் திருமணம் செய்த நபி (ஸல்) அவர்களது இரு புதல்வியரும் யாவர்?

…………………………………………………………………

17. நபி (ஸல்) அவர்களது வாழ்வுடன் சம்பந்தப்பட்ட இரு பிரதான குகைகளும் யாவை?

………………………………………………………………

18. இலங்கை முஸ்லிம்களது வரலாறு பற்றி பேசிய வரலாற்றாசிரியர்கள் நால்வரின் பெயர்களைத் தருக?

………………………………………………………………

19. அரேபியர் இலங்கையின் கரையோர பிரதேசங்களில் குடியேறியமைக்கான காரணங்கள் நான்கு தருக?

…………………………………………………………………

…………………………………………………………………

20. கிறிஸ்துவுக்கு முன்பிருந்தே அரேபியர் இலங்கை வந்தமைக்கான காரணங்கள் யாவை?

…………………………………………………………………

…………………………………………………………………

21. இலங்கை சுதந்திரம் பெறுவதற்காக வேண்டி பெரும்பான்மை இனத்தோடு கைகோர்த்து உழைத்த முஸ்லிம் தேசியத் தலைவர்கள் யாவர்?

…………………………………………………………………

…………………………………………………………………

22. இலங்கை முஸ்லிம்களின் கல்வி மறுமலர்சிக்காக உழைத்தவர்களாக கருதப்படும் முன்னோடி அறிஞர்கள் இருவரின் பெயர்களைக் குறிப்பிடுக?

……………………………………………………………….

23. இலங்கையில் இஸ்லாம் அறிமுகமாகிய பின்னணியை சுருக்கமாக குறிப்பிடுக.

………………………………………………………………

…………………………………………………………………

24. ஸீரா என்ற பதத்தின் கருத்து யாது?

…………………………………………………………………

25. ஜாஹிலிய்யக் காலத்தில் காணப்பட்ட திருமண முறைகள் இரண்டு தருக?

………………………………………………………………………

………………………………………………………………………

26. ஹுதைபிய்யா உடன்படிக்கை யார் யாருக்கிடையில் இடம்பெற்றது?

………………………………………………………………………

27. ஸீரா பற்றி முதன் முதலில் தோன்றிய நூல்கள் இரண்டு தருக?

………………………………………………………………………

28. ஜாஹிலிய்யா காலம் என்பதன் மூலம் கருதப்படுவது யாது?

………………………………………………………………………

29. ஹுதைபிய்யா உடன்படிக்கையில் காணப்பட்ட இரண்டு நிபந்தனைகளைத் தருக.

………………………………………………………………………

………………………………………………………………………

30. நபி (ஸல்) அவர்களது சிறு வயது முதலே அவருக்கு மக்களால் வழங்கப்பட்ட இரண்டு சிறப்புப் பெயர்களை குறிப்பிடுக.

………………………………………………………………………

31. எந்தக் கலீபாவின் காலத்தில் அல்குர்ஆன் முதலில் நூலுருப்படுத்தப்பட்டது?

………………………………………………………………………

32. குறைஷிக் காபிர்களை எதிர்த்து கவிதை பாடும்படி நபி (ஸல்) அவர்கள் ஊக்குவித்த ஸஹாபிகள் இருவரின் பெயர்களைத் தருக.

………………………………………………………………………

33. நபி (ஸல்) அவர்களின் தூதை சுமந்துகொண்டு இலங்கை வந்த வஹப் இப்னு அபீ கப்ஷா (ரழி) பற்றிக் குறிப்பிடும் இரண்டு ஆய்வாளர்களின் பெயர்களைத் தருக.

………………………………………………………………………

34. இலங்கை கரையோரங்களில் குடியேறிய பனூ ஹாஷிம்கள் பற்றி சேர் ஜேம்ஸ் டெனன்ட் குறிப்பிடும் தகவலொன்றை சுருக்கமாக எழுதுக.

……………………………………………………………………

……………………………………………………………………

……………………………………………………………………

35. இலங்கையில் இஸ்லாம் அறிமுகமாகியதை எடுத்துக் காட்டும் வரலாற்றுச் சம்பவம் ஒன்றைக் குறிப்பிடுக.

……………………………………………………………………

……………………………………………………………………

……………………………………………………………………

36. கலீபா அலி (ரழி) அவர்களால் மேற்கொள்ளப்பட்ட பணிகள் இரண்டைக் குறிப்பிடுக.

……………………………………………………………………

……………………………………………………………………

37. ஜாஹிலிய்யாக் காலத்தில் காணப்பட்ட சந்தைகள் இரண்டினைப் பெயரிடுக.

……………………………………………………………………

38. மக்கா கால த.ஃவாவின் போது நபி(ஸல்) அவர்கள் எதிர்கொண்ட சவால்கள் மூன்றினைக் குறிப்பிடுக.

……………………………………………………………………

……………………………………………………………………

……………………………………………………………………

39. ஹிஜ்ரத் நிகழ்வைப் பற்றிச் சுருக்கமாக விளக்குக.

……………………………………………………………………

……………………………………………………………………

……………………………………………………………………

40. இலங்கையின் பொருளாதார விருத்திக்கு முஸ்லிம்கள் ஆற்றிய பங்களிப்புக்கள் இரண்டைக் குறிப்பிடுக.

……………………………………………………………………

41. எந்த மன்னனுடைய காலத்தில் நான்கு முஸ்லிம்கள் வணிக ஆலோசகர்களாக நியமிக்கப்பட்டிருந்தனர்?

……………………………………………………………………

42. அப்பாஸிய கலீபாவினால் இலங்கைக்கு அனுப்பப்பட்ட சமயப் போதகர் யார்?

……………………………………………………………………

43. இலங்கை முஸ்லிம்கள் ஆரம்பத்தில் குடியேறிய இடங்கள் மூன்றைக் குறிப்பிடுக.

……………………………………………………………………

……………………………………………………………………

44. இலங்கை முஸ்லிம்களின் இடம்பெயர்வு நிகழ்வு பற்றி வரலாற்றாசிரியர் அல்பலாதூரி தனது புதூஹுல் புல்தான் எனும் நூலில் குறிப்பிடும் தகவலொன்றை விளக்கமாக எழுதுக.

……………………………………………………………………

……………………………………………………………………

……………………………………………………………………

45. இலங்கையில் இஸ்லாத்தின் அறிமுகம் பற்றிய கருத்துக்களை முன்வைத்துள்ள இரண்டு அரபு நூல்களைப் பெயரிடுக.

……………………………………………………………………

……………………………………………………………………

46. அபூபக்ர் (ரழி) தனது கிலாபத்தின் போது மேற்கொண்ட ஐந்து பணிகளைச் சுருக்கமாக விளக்குக.

……………………………………………………………………

……………………………………………………………………

……………………………………………………………………

……………………………………………………………………

47. நபியவர்களின் மக்கா கால த.்.வாவில் அவருக்குத் துணையாக இருந்தோர் யாவர்?

……………………………………………………………………

48. நபியவர்களின் த.்.வாவைத் தடுக்க, குறைஷியர் கையாண்ட வழிமுறைகளைத் தெளிவுபடுத்துக.

…………………………………………………………………………

…………………………………………………………………………

…………………………………………………………………………

49. இரண்டாவது அகபா உடன்படிக்கை பற்றி விவரிக்குக.

…………………………………………………………………………

…………………………………………………………………………

…………………………………………………………………………

50. மக்கா வெற்றி பற்றிச் சுருக்கமாக விபரிக்குக.

……………………………………………………………………

……………………………………………………………………

……………………………………………………………………

……………………………………………………………………

51. குலபா உர் ராஷிதூன்களைப் பெயரிடுக.

…………………………………………………………………………

…………………………………………………………………………

52. நபிகளாரின் நிருவாக முறை, குலபா உர் ராஷிதூன்களின் நிருவாக முறை ஆகியவற்றுக்கிடையில் காணப்பட்ட ஒற்றுமைகள் மூன்றைக் குறிப்பிடுக.

…………………………………………………………………………

…………………………………………………………………………

…………………………………………………………………………

53. கலீபா உஸ்மான் (ரழி) அவர்களின் சிறப்புப் பெயர்கள் இரண்டைக் குறிப்பிடுக.

……………………………………………………………………

54. நபி (ஸல்) அவர்கள் மக்காவில் வாழ்ந்த காலத்தில் பின்பற்றிய பிரசார முறைகளைப் பற்றிச் சுருக்கமாக விளக்குக.

…………………………………………………………………………

…………………………………………………………………………

## விடைகள்

01.சுதந்திர வேட்கை
மொழிப் புலமை
வாக்கு மீறாமை
விருந்தோம்பல்
வீரம் ,எளிமை

02. வடக்கே – சிரியாப் பாலைவனம்
கிழக்கே – பாரசீகக் குடா
தெற்கே – அரபுக் கடல்
மேற்கே – செங்கடல்

03. இறுதித் தூதர் ஆதலால் அவரது தூது பாதுகாக்கப்பட வேண்டும்.
அவரைப் பின்பற்றுவோர் இன்றுவரை உள்ளனர் ஆதலால்
அவரது வரலாறு மிக சரியாக
எழுதப்பட்டும் பாதுகாக்கப்பட்டும் வருகிறது.
அவரது வரலாறு எல்லா மொழிகளிலும் வந்துள்ளமை.

04. பொய் நபிமார்களின் (முதனப்பி) தோற்றம்
ஸகாத் வழங்க மறுத்த ஒரு கூட்டம் தோன்றியமை
ஹாபில்களின் மரணம் - யமாமா யுத்தம்
உஸாமா (ரழி) தலைமையில் படையனுப்ப
சிலர் விரும்பாமை

05. அபூ பக்ர் (ரழி) யை தூண்டியவர் - உமர் (ரழி)
உஸ்மான் (ரழி) யை தூண்டியவர் - ஹுஸைபதுல் யமானி

06. அபூ பக்ர் (ரழி), உமர் (ரழி) ஐ நியமித்துச் சென்றார் (நியமன முறை)

உமர் (ரழி) , உஸ்மான்,அலி.தல்ஹா,ஸுபைர்,
அப்துர் ரஹ்மான்,ஸஃத் இப்னு அபீ வக்காஸ் குழுவை
நியமித்து தங்களுக்குள் இருந்து ஒருவரை
தெரிவு செய்து கொள்ளும்படி ஆலோசனை
வழங்கினார். (தெரிவு முறை)

07. இலங்கை மன்னன் இஸ்லாம் பற்றி கேள்விப்பட்டு அதன் உண்மைத் தன்மை பற்றி கண்டறிந்து வர ஒரு தூது கோஷ்டியை அரபு நாட்டுக்கு அனுப்பினான், அவர்கள் உமர் (ரழி) காலத்திலேயே அங்கு சென்றடைந்தனர். அவரிடமிருந்து தகவல்களைப் பெற்று திரும்பும் வழியில் மக்ரன் என்ற இடத்தில் தூதுக் குழுவின் தலைவர் மரணித்தார்.ஏனையோர் வந்து மன்னனிடம் செய்தியை எத்திவைத்தனர்.

08. அல்குர்ஆனை எல்லோரும் ஒரே விதமாக ஓத வழி செய்தார் கடற்படையை உருவாக்கினார் (ஹி 27 முஆவியா தலைமையில்) ஆட்சியைவிஸ்தரித்தார்.
(மொரோக்கோ,டியூனீசியா,அலக்ஸந்திரிய்யா,எகிப்து,மத்திய
தரைக் கடல் தீவுகள்..)
அரசியல் நிர்வாக ரீதியான பங்களிப்பு
மஸ்ஜித் நபவியை விஸ்தரித்துக் கட்டினார்

09.கோத்திரத் தலைவரைக் குறிக்கும்
10.கோத்திர உணர்வு
11.ஜாஹிலிய்யக் காலத்தில் கஃபாவில் தொங்கவிடப்பட்ட கவிதைகள்
12.ஹபஷா – எதியோப்பியா
13.நபிக்கு பக்கபலமாக இருந்த அபூ தாலிப் மற்றும் கதீஜா(ரழி) ஆகிய இருவரும் மரணித்தமையால்

14. - உள் நாட்டு உற்பத்திப் பொருட்களுக்கு வெளிநாட்டில் சந்தை வாய்ப்பை பெற்றுக் கொடுத்தமை

- நாட்டை வெளிநாடுகளுக்கு அறிமுகம் செய்தமை
- விவசாயத்திற்கு பங்களிப்பு செய்தமை
- தவளம் போக்குவரத்து முறையை அறிமுகம் செய்தமை
- மன்னர்களுக்கு ஆலோசகர்களாக இருந்தமை
- போர்த்துக்கேயரை விரட்ட கள்ளிக் கோட்டையில் இருந்து படையுதவி பெற்றுக் கொடுத்தமை
- போர்த்துக்கேயருக்கு எதிராக மாயதுன்னையுடன் இணைந்து போராடியமை

15.- புதிய நிர்வாக கட்டமைப்பை உருவாக்கியமை

- ஆளுநர் நியமனத்திற்கான புதிய ஒழுங்குளை அறிமுகம் செய்தமை
- நிர்வாக பணிகளை இலகுபடுத்த பிராந்திய ரீதியிலான அலகுகளை உருவாக்கியமை
- பைதுல்மாலை ஸ்தாபித்து விரிவுபடுத்தியமை
- ஒழுங்கமைக்கப்பட்ட இராணுவத்தை உருவாக்கியமை
- தனித்துவமான நாணயங்களை வெளியிட்டமை
- நகர, நீர்ப்பாசன அபிவிருத்திகளை மேற்கொண்டமை
- ஹிஜ்ரி கலண்டரை அறிமுகம் செய்தமை

16. ருகையா, உம்மு குல்ஸூம்

17. தவ்ர் - ஹிரா

18. பலாதூரி, இப்னு ஷஹ்ரயார்,ஸேர் ஜேம்ஸ் எமர்சன் டெனன்ட் எஸ்.பரணவிதாரன

19. கடற் பயண அனுபவம் காணப்பட்டமை

பாதுகாப்பான துறைமுகம் காணப்பட்டமை

துறைமுகங்களை அண்டிய நகரங்கள் காணப்பட்டமை

வியாபாரப் பொருட்கள் காணப்பட்டமை

உணவு,குடி நீர் வசதிகள் காணப்பட்டமை

கப்பல் நிறுத்த,திருத்த வசதிகள் காணப்பட்டமை

20.பொருத்தமான அமைவிடம்

கடற்பயணம் இலகுவாக இருந்தமை

வர்த்தக பொருட்கள் காணப்பட்டமை

பாதுகாப்பான துறைமுகம் காணப்பட்டமை

மன்னர்களின் வரவேற்பு

பாவ ஆதத மலை காணப்பட்டமை

21.ரீ.பீ ஜாயா

எஸ்.எம் நைனா மரிக்கார்

22.சித்தி லெப்பை - ரீ.பீ ஜாயா. பதியுத்தீன் மஹ்மூத்

23. - வஹப் இப்னு கப்ஷா கி.பி 628 இல் சீனா செல்லும் வழியில் இஸ்லாத்தின் தூதை இலங்கைக்கு எடுத்து வந்து அறிமுகம் செய்தார்.

- நபியின் காலத்தில் அனுப்பப்பட்ட தூது கோஷ்டி இஸ்லாம் பற்றி அறிந்து கொண்டு உமர் (ரழி) காலத்தில் இங்கு வந்து எத்திவைத்தார்.

- கி.பி 8 ஆம் நூற்றாண்டில் உமையாக் காலத்தில் ஹஜ்ஜாஜின் கொடுமைகளுக்கு அஞ்சி பனூ ஹாஷிம்கள் இங்கு குடியேறியதன் மூலம் இஸ்லாம் அறிமுகமாகியது.

24. நபி (ஸல்) அவர்களது வாழ்க்கை வரலாறு

25. நிகாஹ் ஸாலிஹ் -மேல்மட்ட நேரிய வழியிலான திருமண முறை

நிகாஹ் முத்ஆ – தற்காலிக திருமணம்

26. குறைஷிக் காபிர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில்

27. முஹம்மத் பின் இஸ்ஹாக் ஹி 151

அப்துல் மலிக் பின் ஹிஷாம் ஹி 218

28. இஸ்லாம் அறிமுகமான காலம்.அறிவும் பண்பும் நிலவாத காலம்.

இறைவழிகாட்டலுக்கு முரணான வாழ்வு முறை

நிலவிய காலம்

29.- இந்த ஆண்டு மக்காவுக்கு நுழைய முடியாது.

-10 ஆண்டுகள் யுத்த நிறுத்த ஒப்பந்தம்

30. அல் அமீன் - நம்பிக்கையாளர்
அஸ்ஸாதிக் - உண்மையாளர்
31. அபூ பக்கர் (ரழி)
32. ஹஸ்ஸான் பின் ஸாபித்
கஅப் இப்னு மாலிக்
அப்துல்லாஹ் பின் ரவாஹா
33. தோமஸ் ஆர்னல்ட், எம்.சி சித்திலெப்பை
34. கி.பி எட்டாம் நூற்றாண்டில் உமையா கலீபா அப்துல் மலிக் மற்றும் வலீத் ஆட்சி காலத்தில் ஈரா கவர்னராக இருந்த ஹஜ்ஜாஜின் கொடுமைக்கு அஞ்சி உமைய வம்ச அரசின் எதிரிகளாக கருதப்பட்ட பனு ஹாஷிம்கள் தென்னிந்திய மற்றும் இலங்கை கரையோரங்களில் குடியேறிய தகவல் ஒன்றை சிலோன் எனும் நூலில் சேர் கேம்ஸ் எமர்சன் டெனன்ட் குறிப்பிடுகின்றார்.
35. கி.பி எட்டாம் நூற்றாண்டின் ஆரம்ப பகுதியில் அப்போதைய இலங்கை மன்னரான இரண்டாம் தாடோபதிஸ்ஸ இலங்கையில் காலம் சென்ற அரேபிய வர்த்தகர் சிலரின் விதவை மனைவிகளையும் அனாதைகளான பிள்ளைகளையும் அரேபியாக்கு அனுப்பி வைத்தான். இவர்களும் இவர்கள் சென்ற கப்பலும் இன்றைய கராச்சிக்கு அண்மையில் உள்ள டேபிள் என்னும் இடத்தில் வைத்து கொள்ளையரால் சிறைபிடிக்கப்பட இது சம்பந்தமாக அறிந்த ஹஜ்ஜாஜ் சிந்து நாட்டு மன்னன் ரோய் தாக்கூருக்கு பெண்களை உடனே விடுதலை செய்யுமாறு கடிதம் எழுதினார். ஹஜ்ஜாஜின் வேண்டுகோள் உதாசீனம் செய்யப்பட்டதால் சிந்து நாட்டின் மீது முஹம்மத் பின் காசிம் தலைமையில் பெரும் படையொன்று அனுப்பப்பட்டு கிருஸ்த்துக்கு பின் 715 இல் சிந்து பிரதேசம் முஸ்லிம்களால் வெற்றிக்கொள்ளப்பட்டது.
36. ஆட்சி பீடமாக விளங்கிய கூபா நகரம் அபிவிருத்தி செய்யப்பட்டமை.
குடிமக்களின் அதிருப்தியைப் பெற்றிருந்த சில கவர்னர்களை பதவி நீக்கம் செய்தமை..

இஸ்லாத்தை தவறாக புரிந்து கொண்டு தீவிரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த ஹவாரிஜிகளின் அட்டூழியங்களை கட்டுப்படுத்தியமை

போலீஸ் திணைக்களம் மறுசீரமைப்பு செய்யப்பட்டமை

நகரமயமாக்கல் கலாசார மேம்பாட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டமை.

37. உக்கால் , மிஜன்னா , துல் மஜாஸ்

38. அபூலஹப், அபூஜஹ்ல் முதலானோர் தலைமையில் எதிர்ப்புக் குழுவினர் களம் இறங்கியமை.

நபி (ஸல்) மற்றும் அவர்களுடைய தோழர்களை உடலியல் ரீதியாக துன்புறுத்தியமை

ஷிஃபு அபீதாலிப் பள்ளத்தாக்கில் 03 வருடங்கள் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தமை

39.நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் மக்காவில் எதிர்ப்புகள் அதிகரித்த பொழுது அல்லாஹுத்தஆலா உடைய ஏற்பாட்டின் அடிப்படையில் மக்காவிலிருந்து மதினாவுக்கு ரசூலுல்லா ஹிஜ்ரத் செய்தார்கள். அவ்வாறு ஹிஜ்ரத் செய்கின்ற நிகழ்வைப் பற்றி குறிப்பிடுகின்ற பொழுது ரசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஹிஜ்ரத்துக்கான தயார் நிலையில் இருந்தார்கள் அபூபக்கர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களை வைத்து தமக்குத் தேவையான பயணத் தோழமையையும் இன்னும் சில நபர்களூடாக பயணத்துக்கான ஏற்பாடுகளையும் செய்தார்கள். அந்த வகையில் போகின்ற பயணத்தின் வழிகாட்டியாக அப்துல்லாஹ் என்பவரையும் மக்காவிலிருந்து தகவல்களை பெற்றுக் கொள்வதற்காக வேண்டி அபூபக்கர் ரலியல்லாஹு அன் அவர்களுடைய மகனையும் தமக்குத் தேவையான உணவுகளை பெற்றுக் கொடுப்பதற்காக வேண்டி மகள் அஸ்மா ரலியல்லாஹு அன்ஹா அவர்களையும் தன்னிடம் விட்டுச் சென்றிருந்த அமானிதங்களை முழுமையாக ஒப்படைத்து வருமாறு அலி ரலியல்லாஹு அன்ஹு

அவர்களையும் நியமித்துவிட்டு ஹிஜ்ரத் பயணத்தை மேற்கொண்டார்கள். மூன்று இரவுகள் இரண்டு பகல்கள் தவ்ர் குகையில் தங்கிய நபி அவர்கள் மதினாவை நோக்கி சென்றார்கள்.

40. இலங்கையின் ஏற்றுமதி பொருட்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து அன்னைய செலாவணி ஏற்றுக் கொள்வதற்கு முஸ்லிம்கள் உதவியமை
நாட்டின் விவசாய மேம்பாட்டுக்கு உழைத்தமை
வெளிநாடுகளில் இருந்து நெசவுத் தொழிலாளர்களை அழைத்து வந்து அதனை வளர்க்க பாடுபட்டமை
தவளம் எனும் போக்குவரத்து முறையை அறிமுகப்படுத்தி அதை பரிபாலித்து வந்தமை

41. மகா பராக்கிரமபாகு ( 1156 – 1186 )

42. காலித் இப்னு பகாயா

43. கொழும்பு, பேருவலை, காலி, மாத்தறை

44. கி.பி எட்டாம் நூற்றாண்டின் ஆரம்ப பகுதியில் அப்போதைய இலங்கை மன்னரான இரண்டாம் தாடோப திச இலங்கையில் காலம் சென்ற அரேபிய வர்த்தகர் சிலரின் விதவை மனைவிகளையும் அனாதைகளான பிள்ளைகளையும் அரேபியாக்கு அனுப்பி வைத்தான். இவர்களும் இவர்கள் சென்ற கப்பலும் இன்றைய கராச்சிக்கு அண்மையில் உள்ள டேபிள் என்னும் இடத்தில் வைத்து கொள்ளையரால் சிறைபிடிக்கப்பட இது சம்பந்தமாக அறிந்த ஹஜ்ஜாஜ் சிந்து நாட்டு மன்னன் ரோய தாக்கருக்கு பெண்களை உடனே விடுதலை செய்யுமாறு கடிதம் எழுதினார். ஹஜ்ஜின் வேண்டுகோள் உதாசீனம் செய்யப்பட்டதால் சிந்து நாட்டின் மீது முஹம்மத் பின் காசிம் தலைமையில் பெரும் படையொன்று அனுப்பப்பட்டு கிருஸ்த்துக்கு பின் 715 இல் சிந்து பிரதேசம் முஸ்லிம்களால் வெற்றிக்கொள்ளப்பட்டது.

45. அஜாஇபுல் ஹிந்த் , புதூஹுல் புல்தான்

46. நபியவர்களுக்குப் பின் கிலாபத்தை பொறுப்பேற்று நல்லாட்சியை தொடர்ந்தமை.

பொய் நபிமார்களின் சவால்களை அனுபவிக்க தளபதிகளின் பங்களிப்புடன் முறையடித்து கிலாபத்தின் பலத்தை நிஷரூபித்தமை.

ஸகாத் வழங்க மறுத்த கூட்டத்தின் சூழ்ச்சியை முறையடித்தமை.

அல்குர்ஆனைத் தொகுத்து நூலுருப் படுத்தியமை.

அரசியல் அனுபவம் மிக்க பல கவர்னர்களை நியமித்து நிர்வாகத்தை உறுதிப்படுத்தியமை.

47. கதீஜா (ரழி), அபூதாலிப், அபூபக்கர் (ரழி)

48. கொடுமைப்படுத்தியமை

அபூதாலிப் ஊடாக பதவி, அந்தஸ்து என்பவற்றை வழங்கி தடுக்க முற்பட்டமை

நேரடியாக அணுகி பிரசாரத்தை நிறுத்தக் கோரியமை

இரு பகுதியினரதும் வழிபாட்டில் இணக்கம் காண முனைந்தமை

தனிமைப்படுத்தி வைத்தமை

49. முதலாவது அகபா உடன்படிக்கையை செய்து கொண்ட மதீனா வாசிகள் தமது மக்களிடம் இந்த நற்செய்தியை எடுத்துரைத்தார்கள். இதன் பின் அடுத்த யாத்திரை காலத்தில் பன்னிருவர் மக்கா வந்து இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டனர் நபி ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் அவர்களின் உறுதிமொழியிலும் பங்கு கொண்டனர். அடுத்த யாத்திரை காலத்தில் நுபுவ்வத் பன்னிரெண்டில் யஸ்ரிப் வாசிகள் 72 பேர் மக்கா வந்தனர் நபி அவர்களை சந்தித்ததோடு முன்னைய உறுதி மொழியை புதுப்பித்துக் கொண்டனர். இது பைஅத்துல் அகபா 2 என வழங்கப்படுகிறது.

50. ஹிஜ்ரி ஆறில் மேற்கொள்ளப்பட்ட உதைபியா சமாதான உடன்படிக்கையை குறுகிய காலத்தில் குரேஷிகள் முறித்தனர் அதனைத் தொடர்ந்து நடந்த நிகழ்வுகளின் பின்னணியில் ஹிஜ்ரி எட்டில் மக்கா முஸ்லிம்களின் கட்டுப்பாட்டில் வந்தது இது பத்ஹூ மக்கா என அழைக்கப்படுகிறது.

51. அபூபக்கர் (ரலி), உமர் (ரலி), உஸ்மான் (ரலி), அலி (ரலி)

52. குடும்ப சமய சமூக அரசியல் பொருளாதார கல்வி கலாசார விவகாரங்கள் அனைத்தும் அல்லாஹ்வின் திருப்தியை நாடியதாகவும் அமைந்தமை.

நேர்மையாகவும் தன்னலமின்றியும் ஆட்சி செய்தமை.

நடுநிலைமையாக காணப்பட்டமை

53. துன்னூரைன் , ஜாமீஉல் குர்ஆன்

54. காபிர்கள் தன் மீது வசைக் கவிபாடி இஸ்லாத்துக்குவகிக்க ஏற்படுத்த முயற்சித்து வேலையில் சஹாபாக்களை அழைத்து காபிர்கள் எதிர்த்து கவிதை பாடும் பணித்து ஊக்குவித்தமை

ஜாலியா கால வழக்கில் முக்கியமான ஒரு செய்தியை செல்வதற்கு உயர்ந்ததோர் இடத்தில் ஏறி ஆடைகளை கலைந்து விட்டு குறித்த செய்தியை முன்வைக்கும் மரபு காணப்பட்டது நபி அவர்களும் அதே மரப்பை கையாண்டார்கள் என்றாலும் ஆடைகளை களையாமல் கண்ணியமாக நடந்து கொண்டார்கள்.

ஸபா மலை கொண்டு மற்றும் சந்தைகள் மஸ்ஜித் மிம்பர் ம.்.தனா முதலியவற்றையும் ஊடகமாக பயன்படுத்தினார்கள்.

வரைந்து காட்டுதல்..

நடைமுறை உதாரணங்களோடு விளக்கி காட்டுதல்.